V.V. Titanium Pigments Pvt. Ltd.,
A-81, Sipcot Industrial Complex,
South Veerapandiapuram PO,
Thoothukudi – 628002, Tamil Nadu, India

# வணிக கொள்கைகளின் சட்டத்தொகுப்பு

## 1.0 நிலையான வழிக்காட்டுதல் / ஒழுங்குமுறை

வி.வி. டைட்டானியம் பிக்மென்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் (VVTi) நடத்தையால் நேர்மையுடனும், நாணயத்துடனும் வெளிப்படைத் தன்மையுடனும் மனித உரிமைகளுக்கு மரியாதை அளித்தும் மற்றும் எங்கள் தொழிலாளர்களின் நலன் கருதியும் எங்கள் பணியை மேற்கொள்வோம்.

மேலும் எங்கள் நிறுவனத்துடன் நல் உறவுக் கொண்ட அனைத்து நிறுவனத்தின் முறையான நலன்களுக்கு மதிப்பளிப்போம்.

## 2.0 சட்டத்தை மதித்தல்

வி.வி. டைட்டானியம் பிக்மென்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் (VVTi)'ல் அனைவரும் நிறுவனம் வணிகம் புரியும் நாட்டின் சட்டத் திட்டங்களுக்கு இணங்கிச் செயல்பட வேண்டும்.

## 3.0 தொழிலாளர்கள்

i. VVTi தன்னுடைய ஊழியர்களை நிறுவனத்தின் அனைத்துக் கொள்கைகளுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் செயல்பட முடிவுகளை நல்நிதானிப்போடு எடுத்து நேர்மையான வணிகத்தை உறுதியாய்ச் செயல்படுத்தவும் ஊக்குவிக்கிறது.

ii. அனைத்து மட்டத்திலும் உள்ள மேற்பார்வையாளர்களுக்குக் கூடுதல் பொறுப்பாக மற்றும் அவர்களினிடத்தின் எதிர்பார்ப்புகளாக

அ) நேர்மையுடன் செயல்பட உதாரணமாக இருந்து வழிநடத்துதல்.

ஆ) குறியீட்டிற்கு இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக அவர்களைச் சார்ந்தப் பணியாளர்களுடன் தொடர்புக் கொள்ளுதல்.

இ) குறியீடை நிலையாகச் செயல்படுத்துதல்.

VVTi'ல் பணிபுரியும் அனைத்துத் தொழிலாளர்களும் பரஸ்பர நம்பிக்கை மற்றும் மரியாதை நிறைந்தப் பன்முகத்தன்மைக் கொண்டுப் பணி செய்து நிறுவனத்தின் நல்ல

செயலாக்கத்திற்கும் நற்பெயருக்கும் கலங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதுத் தங்களின் பொறுப்பு என்பதனை உணர்ந்துச் செயல்பட வேண்டும் என நிறுவனம் எதிர்பார்க்கிறது. எங்கள் சக ஊழியர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் வணிகக் கூட்டாளிகளுக்கும் மரியாதை, நியாயம் மற்றும் உள்ளடக்கம் கொண்டப் பணியிடத்தை அமைத்து ஊக்குவிக்கிறோம் மற்றும் ஒவ்வொருத் தனிநபரின் தனிப்பட்டக் கௌரவம், தனியுரிமை மற்றும் பாதுகாப்பை அளிக்கிறப் பணிச்சூழலைப் பராமரிக்கிறோம்.

iii. எங்களது நிறுவனத்திற்குத் தேவையானத் தொழிலாளர்களை அவர்களது படிப்பு மற்றும் திறமையைக் கொண்டுப் பணி அமர்த்துவோம். ஒவ்வொரு ஊழியர்களும் அவர்களுடையப் பணியின் பொறுப்பைப் புரிந்துள்ளனர்கள் என்று உறுதிப்படுத்துவதற்குச் செயல்திறன் மேலாண்மைச் செயல்முறைகளைக் கையாழ்கிறோம். எல்லா ஊழியர்களும் பணியமர்த்தல், பயிற்சி, பதவி உயர்வு, இழப்பீடு மற்றும் பணிநிருத்தல் போன்ற விஷயங்களில் அவரவரின் பணித் தலைப்போ அல்லது மட்டமோச் சாராமல் நடத்தப்படுவார்கள்.

iv. எங்கள் நிறுவனத்தில் வேலை செய்வதற்கு ஏற்றவாறுப் பாதுகாப்பு நிறைந்த ஆரோக்கியமானச் சூழலைத் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தித் தருகிறோம். மேலும் நாங்கள் தொழிலாளர் மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கிடையேத் தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் இணைந்துச் செயல்பட்டுப் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான வணிகம் புரிய வழிவகைச் செய்வோம்.

v. எங்கள் நிறுவனம் எங்களிடம் பணிபுரியும் பல நாட்டவர்களுக்கும் பண்பாடு, ஜாதி, மதம், வயது, ஆண், பெண் இனப் பாகுபாடின்றி அனைவருக்கும் சம உரிமையளிக்கிறது.

vi. மேலும் எங்கள் நிறுவனத்தில் பணியமர்த்தும் போதுத் தொழிலாளர் சட்டத்திற்குப் புறம்பாக யாரையும் கட்டாயப்படுத்தியோ அல்லதுக் குழந்தைகளையோத் தொழிலாளர்களாகப் பணிக்கு அமர்த்துவதில்லை.

vii. நாங்கள் எங்கள் தொழிலாளர்களுடன் இணைந்து வேலை செய்வதன் மூலம் அவர்களதுத் தனித்திறன்களை வெளிப்படுத்திப் பிரகாசிக்கப் பயிற்சி அளிக்கிறோம்.

நாங்கள் எங்கள் தொழிலாளர்களின் தனிநபர் மரியாதை மற்றும் சங்கச் சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கிறோம்.

நாங்கள் தொழில் ரீதியான ஆலோசனை மற்றும் நல்லுறவைத் தொழிலாளர்களுடன் சீராகப் பயன்படுத்துவோம்.

**4.0 வாடிக்கையாளர்கள்**

VVTi நிறுவனம் தங்களின் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப உலகத்தரம் வாய்ந்தப் பொருட்களை மிகக்குறைந்த விலையில் விநியோகித்துப் பயனீட்டாளர்களின் பாதுகாப்பையும் மனதில் கொண்டு விநியோகம் செய்கிறது. VVTi நிறுவனம் தங்களின் வாடிக்கையாளர் திருப்திக்காக அதிகம் பாடுபடும் என உறுதியளிக்கிறது. மேலும் VVTi நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் வாடிக்கையாளர்களைத் தொடர்புக் கொள்ளும் போது வாடிக்கையாளர் மையமாகச் செயல்பட வேண்டும் என எதிர்பார்க்கிறது.

**5.0 வணிகக் கூட்டாளி**

VVTi நிறுவனத்துடன் தொழில் ரீதியாகத் தொடர்புடைய அனைத்து வாடிக்கையாளர்கள் மற்றும் தொழில் பங்கீட்டாளர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் எங்கள் நிறுவனம் செயல்படும் என உறுதியளிக்கிறது.

மேலும் தொழில் ரீதியான நடவடிக்கைகள் அனைத்திலும் பங்கீட்டாளர்கள், நிறுவனத்தின் சட்டத் திட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் உட்பட்டு நடக்க வேண்டும் என நிறுவனம் எதிர்பார்க்கிறது.

**6.0 சமுதாய ஈடுபாடு**

VVTi நிறுவனம் ஒரு நம்பிக்கைக்குரிய ஸ்தாபனமாக இருக்கும் என்றும் சமுதாயத்துடன் பின்னிப் பிணைந்தக் கூட்டு ஸ்தாபனமாகவும், எங்களது நிறுவனம் எங்கு செயல்படுகிறதோ அங்குள்ள சமுதாயத்தினருக்கும், இனத்தவர்களுக்கும் முழு மனதோடுச் செயல்படக் கடுமையாக உழைக்கும்.

**7.0 பொது நடவடிக்கைகள்**

VVTi நிறுவனம் முறையாகத் தொழில் புரிவோர்களை முன்னேற்றப் பாடுபடும்.

VVTi நிறுவனம் அரசாங்கத்துடனோ, வேறு அமைப்புகளுடனோ நேரடியாகவோ அல்லது வியாபாரச் சங்கங்கள் மூலமாகவோ ஏற்பாடு செய்யப்பட்ட முறையான வாணிபத்திற்குப் பாதிப்பு ஏற்பட்டாலும், ஒத்துழைப்பு நல்கிப் பணி முடிக்க அயராதுச் செயல்படும்.

VVTi நிறுவனம் அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாகவோ, கட்சிகளுக்கு ஆதரவாக செயல்படும் கூட்டத்தினருக்கோ எந்தவித நிதியும் அளிக்காது. என்றும் இச்செயல்பாடுகளில் நடுநிலையாகச் செயல்படும்.

### 8.0 சுற்றுச்சூழல்

VVTi நிறுவனம் தன்னுடையச் சுற்றுச்சூழல் தாக்கங்களின் நிர்வாக வளர்ச்சிக்காகப் பாடுபடுவது மட்டுமல்லாமல் தன்னுடைய நிலையானத் தொழில் நீண்டக் கால இலக்கை உண்டாக்குவதற்கு உரிய மேம்பாடுகளைத் தொடர்ச்சியாகச் செய்யும்.

VVTi நிறுவனம் சமூகச் சூழலின் அக்கறையை வளர்ப்பதோடு அதனை நன்குப் புரிந்துக் கொண்டுப் பின்பற்றவும், அனைவருடன் இணைந்து வேலை செய்யும்.

### 9.0 புதுமையானச் சிந்தனை

எங்களதுப் புதுமையான அறிவியல் அணுகுமுறைகளைக் கொண்டு எங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் சமுதாயத்தின் தேவைகளுக்கு மரியாதை அளிப்போம். நாங்கள் அறிவியல் பூர்வமாகத் தயாரிப்புகளின் தரம் மற்றும் பாதுகாப்பின் கடுமையானத் தரநிலைகளுக்கு உட்பட்டுச் செயல்படுவோம்.

### 10.0 போட்டிகள்

VVTi நிறுவனம் நியாயமானப் போட்டிகளை நம்பிப் போட்டிச் சட்டங்களின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கிறது. எங்களது நிறுவனமும் தொழிலாளர்களும் நியாயமானப் போட்டியின் கொள்கைகளுக்கேற்பச் செயல்பட்டு நடப்பார்கள்.

### 11.0 தொழில் நேர்மை

VVTi நிறுவனம் வணிகத்திற்காக அல்லது நிதி ஆதாயத்திற்காக யாரிடமும் தவறான அனுகூலங்களைக் கையாள்வதோ அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ லஞ்சம் வாங்கவும் கொடுக்கவும் செய்யாது. மேலும் எந்த ஒருத் தொழிலாளியும் லஞ்சம் எனக் கருதப்படும் பணம் வழங்குதல் அல்லது பரிசுப் பொருட்களைக் கொடுப்பதும் வாங்குவதும் இல்லை. அவ்வாறு ஏதேனும் நடக்குமாயின் அதனை உடனடியாக நிராகரித்துவிட்டு உடனே நிர்வாகத்திற்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.

VVTi நிறுவனத்தின் கணக்குப் பதிவுகள் மற்றும் ஆதரிக்கும் ஆவணங்கள் அடிப்படைப் பரிவர்த்தனையின் இயல்பானத் தன்மையைத் துல்லியமாக விவரித்து அதனைப் பிரதிபலிக்கும். மேலும் வெளியிடப்படாத அல்லதுப் பதிவு செய்யப்படாதக் கணக்குகளோ, நிதிகளோ, சொத்துக்களோ நிறுவப்படுவதுமில்லை மற்றும் பராமரிக்கப்படுவதுமில்லை.

VVTi

**12.0 நலன்களின் மோதல்கள்**

VVTi நிறுவனத் தொழிலாளர்களின் சொந்த வேலையோ அல்லது நிதி நலன்களோ நிறுவனத்தில் அவர்களுடையப் பொறுப்பிற்கு இடையூறு அல்லது சச்சரவு ஏற்படுத்துமாயின் அதனைத் தொழிலாளர்கள் தவிர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

VVTi நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்களுக்காகவோ பிறருக்காகவோ ஆதாயம் தேடுவதற்காகத் தங்களதுப் பதவியைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது.

**13.0 இணக்கம்**

இந்தக் கொள்கைகளுடன் இணைந்துச் செயல்படுவது எங்களதுத் தொழில் வெற்றியின் அத்தியாவசிய ஒன்றின் பகுதியாகும். இந்தக் கொள்கைகளை உறுதியாக நிறுவனத்தில் பயன்படுத்தி எல்லா வகையிலும் VVTi'ல் செயல்முறைப்படுத்துவது நிறுவனத்தின் இயக்குநரின் பொறுப்பு.

மேலும் இதனை மனிதவளம் மற்றும் சப்ளைச் சங்கிலி பிரதிநிதியின் உதவியுடன் துணைத் தலைவர் / பொது மேலாளர் இந்தக் கொள்கைகளைச் செயல்படுத்த வேண்டும்.

**14.0 கொள்கை மீறல் பற்றித் தெரிவித்தல்**

நிறுவனத்தில் நிகழும் கொள்கை மீறல் பற்றி எந்தவித பதிலடிக் குறித்தப் பயமும் தயக்கமும் இல்லாமல் சொல்பவர்களுக்கு நிறுவனம் எப்போதும் ஆதரவும் ஊக்கமும் அளிக்கும்.

யாரேனும் (குழு உறுப்பினரோ அல்லது VVTi சார்பாகச் செயல்படுபவரோ உட்பட) நிறுவனக் கொள்கைக்கு இணங்கிச் செயல்படாமல் இருந்தால் அவை விநியோகஸ்தர்க்குத் தெரியவரும் தருவாயில் அதனை உடனே நிறுவனத்தின் மின் அஞ்சல் முகவரி hr@vvtitanium.in மூலம் தெரியப்படுத்தலாம். தொழிலாளர்கள் தங்களின் அடையாளங்களை மறைத்துப் பாதுகாக்கப்பட்ட வெளியீடுகளாக ASO அறை அருகிலுள்ள பரிந்துரைப் பெட்டியில் போடலாம். அவ்வாறு செய்யத் தவறினாலும் கொள்கை மீறுதலாகவேக் கருதப்படும்.